## தமிழ்நாடு வழக்கறிஞர்கள் நல நிதியிலிருந்து உயிரிழந்த

# 10 வழக்கறிஞர்களின் குடும்பத்தினருக்கு ரூ.1 கோடி நிதியுதவி!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, நவ. 14 -

தமிழ்நாடு வழக்கறிஞர்கள் நல நிதியமானது உயிரிழந்த வழக்கறிஞர்களின் வாரிசுதாரர்களுக்கு நிதியுதவி வழங்குவதற்காக நிறுவப்பட்டு, தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வழக்கறிஞர்கள் குழுமத்தால் நிர்வகிக்கப்படுகிறது. தமிழ்நாடு வழக்கறிஞர்கள் நல நிதியிலிருந்து பயனாளிகளுக்கு வழங்குப்படும் நிதியுதவி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான அரசால் 7 இலட்சம் ரூபாயிலிருந்து 10 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டது. மேலும், தமிழ்நாடு வழக்கறிஞர்கள் நல நிதிக்கு வழங்கப்படும் அரசின் ஆண்டு மானியமும் 8 கோடி ரூபாயிலிருந்து 10 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

அந்த வகையில், தமிழ்நாடு வழக்கறிஞர் நலநிதியத்திலிருந்து உயிரிழந்த 10 வழக்கறிஞர்களின் குடும்பத்தினருக்கு நிதியுதவி வழங்கிடும் வகையில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (13.11.2024) தலைமைச் செயலகத்தில், அவ்வழக்கறிஞர்களின் வாரிசுதாரர்களுக்கு தலா 10 இலட்சம் ரூபாய் வீதம், மொத்தம் 1 கோடி ரூபாய்க்கான காசோலைகளை நிதியுதவியாக வழங்கினார்.

இந்த நிகழ்வில், சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, நாடாளுமன்ற உறுப்பினரும் மூத்த வழக்கறிஞருமான பி.வில்சன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ் குமார், சட்டத்துறை செயலாளர் எஸ்.ஜார்ஜ் அலெக்சாண்டர், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வழக்கறிஞர்கள் சங்கத் தலைவர் பி.எஸ். அமல்ராஜ், இந்திய வழக்கறிஞர் சங்கத்தின் துணைத் தலைவர் எஸ்.பிரபாகரன், அரசு தலைமை வழக்கறிஞர் பி.எஸ்.ராமன், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி வழக்கறிஞர்கள் சங்க துணைத் தலைவர் வி.கார்த்திகேயன், மூத்த வழக்கறிஞர் ஆர்.விடுதலை, இணைத் தலைவர்கள் ஆர்.அருணாசலம், ஜி.மோகனகிருஷ்ணன், எம். மாரப்பன், பி.அசோக், சி.ஸ்ரீமுருகா, டி.சரவணன், கௌரவ செயலாளர் ஆர்.அய்யாவு, செயற்குழு தலைவர் திருமதி ஜெ.பிரிஸ்சில்லா பாண்டியன், உறுப்பினர்கள் எம்.வரதன், கே.சந்திரமோகன், ஆர்.சி.பால்கனகராஜ், எம்.வேல்முருகன், கே. கதிரவன், கே.ஆர்.ஆர். அய்யப்பமணி மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## அரசு மருத்துவர் பாலாஜி மீது கத்தியால் தாக்குதல்!

# விரிவான விசாரணை நடத்திட முதல்வர் உத்தரவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேரில் நலம் விசாரித்தார்!

**சென்னை, நவ. 14 -**

**சென்னை கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் மருத்துவர் பாலாஜியை நோயாளியின் குடும்பத்தி னர் கத்தியால் குத்தியதற்கு விரிவான விசாரணை நடத்திட உத்தரவிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இனி இது போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நிகழாமல் தடுக்க அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளும் என்றும் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

சென்னை, கிண்டி, கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் பணிபுரியும் மருத்துவர் பாலாஜி அவர்களை, நோயாளியின் குடும்ப உறுப்பினர் ஒருவர் கத்தியால் குத்திய சம்பவம் அதிர்ச்சியளிக்கிறது. இக்கொடுஞ்செயலில் ஈடுபட்ட நபர் உடனடியாகக் கைது செய்யப்பட்டுள்ளார். மருத்துவர் பாலாஜி அவர்களுக்குத் தேவையான அனைத்து சிகிச்சைகளை அளித்திடவும், இச்சம்பவம் குறித்து விரிவான விசாரணை நடத்திடவும் ஆணையிட்டுள்ளேன்.

அரசு மருத்துவமனைகளை நாடி வரும் நோயாளிகளுக்கு நேரம், காலம் பார்க்காமல் உரிய சிகிச்சை அளிப்பதில் நமது அரசு மருத்துவர்களின் தன்னலமற்றப் பணி அளப்பரியது. இப்பணியின்போது அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல் நம் அனைவரின் கடமையாகும்.

இதுபோன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நிகழாமல் தடுத்திடுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளும்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

**துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேரில் ஆறுதல்!**

இந்நிலையில் இச்சம்பவச் செய்தி அறிந்ததும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று மருத்துவர் பாலாஜி அவர்களின் உடல் நலம் குறித்து விசாரித்தறிந்து அவருக்கு உரிய சிகிச்சை அளிக்க மருத்துவர்களை வலியுறுத்தினார். இந்நிகழ்வின்போது அமைச்சர் மா.சுப்பிரமணியன், அரசு மருத்துவர்கள் உடனிருந்தனர்.

# இந்து சமய அறநிலையத் துறை சார்பில் திட்டப் பணிகள்!

## முதல்வர் தொடங்கி வைத்தார் !... முதல் பக்கத் தொடர்ச்சி

**18 திருக்கோயில்களில் 25 புதிய திட்டப் பணிகள் மற்றும் 4 அலுவலகக் கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டுதல் :**

மதுரை மாவட்டம், அழகர்கோயில், அருள்மிகு கள்ளழகர் திருக்கோயிலில் 49.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெருந்திட்ட வளாக மேம்பாட்டு பணிகள் மற்றும் பணியாளர் குடியிருப்பு கட்டும் பணிகள்; திருவண்ணாமலை, அருள்மிகு அருணாச்சலேசுவரர் திருக்கோயிலில் 44.57 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெருந்திட்ட வளாக மேம்பாட்டு பணிகள், குபேரலிங்கம் அருகில் வணிக வளாகம் கட்டும் பணி, கோபுரங்கள் மற்றும் விமானங்கள் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கும் பணி மற்றும் ஏழு தீர்த்த குளங்களை சீரமைக்கும் பணிகள்; தண்டராம்பட்டு வட்டம், வானாபுரம், அருள்மிகு பிள்ளையார் மாரியம்மன் திருக்கோயி லில் 5.63 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய திருமண மண்டபம் கட்டும் பணி: திருவண்ணாமலை, அருள்மிகு நந்தவக் கட்டளையில் 1.07 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய வணிக வளாகம் கட்டும் பணி: திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் 25.62 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பெருவள வாய்க்கால் இரு புற கரைகளிலும் திருக்கோயில் வாகன நிறுத்துமிடத்திற்கு செல்ல சாலைகள் அமைத்தல், தடுப்புச்சுவர் கட்டுதல், புதிதாக திருக்கோயில் நுழைவுவாயில் அமைக்கும் பணி, கோபுரங்கள் மற்றும் விமானங்களை வண்ண விளக்குகளால் அங்கரிக்கும் பணிகள்; நாகப்பட்டினம் மாவட்டம், துளசியா பட்டினம், அருள்மிகு ஔவையார் மற்றும் விஸ்வநாத சுவாமி திருக்கோயிலில் 18.95 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஔவையார் மணி மண்டபம் கட்டும் பணி;

**பக்தர்களுக்கு அடிப்படை வசதிகள் கோயில்கள் சீரமைப்புப் பணிகள்!**

கோயம்புத்தூர் மாவட்டம், மருதமலை, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 6.90 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேற்கொள்ளும் பணி; கருமத்தம்பட்டி, அருள்மிகு சென்னியாண்டவர் திருக்கோயிலில் 2.29 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய ஐந்து நிலை இராஜகோபுரம் அமைக்கும் பணி; திருப்பூர் மாவட்டம், பெருமாநல்லூர், அருள்மிகு கொண்டத்துக்காளியம்மன் திருக்கோயிலில் 5.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய திருமண மண்டபம் கட்டும் பணி; திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 3.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னையில் இருந்து திருப்பதிக்கு பாதயாத்திரை செல்லும் பக்தர்களுக்கான தங்கும் விடுதி கட்டும் பணி; ஈரோடு மாவட்டம், கொடுமுடி, அருள்மிகு சடையப்ப சுவாமி திருக்கோயிலில் 3.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய கருங்கல் முன் மண்டபம் கட்டும் பணி; பெருந்துறை வட்டம், தங்கமேடு, அருள்மிகு தம்பிகலை ஐயன் சுவாமி திருக்கோயிலில் 1.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய அன்னதானக் கூடம் கட்டும் பணி; பண்ணாரி, அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயிலில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணி;

திண்டுக்கல் மாவட்டம், கீரனூர், அருள்மிகு வாகீஸ்வரர் திருக்கோயிலில் 3.80 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய திருமண மண்டபம் கட்டும் பணி; செங்கல்பட்டு மாவட்டம், அரசர்கோயில், அருள்மிகு வரதராஜப்பெருமாள் திருக்கோயிலில் 2.42 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய ஐந்து நிலை இராஜகோபுரம் கட்டும் பணி; சென்னை, திருவல்லிக்கேணி, அருள்மிகு தீர்த்தபாலீஸ்வரர் திருக்கோயிலில் 2.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்நோக்கு மண்டபம் கட்டும் பணி; நாமக்கல் மாவட்டம், வளப்பூர் நாடு, அருள்மிகு அறப்பளீஸ்வரர் சுவாமி திருக்கோயிலில் 2.10 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய மூன்று நிலை இராஜகோபுரம் அமைக்கும் பணி; கூவைமலை, அருள்மிகு பழனியாண்டவர் திருக்கோயிலில் 1.35 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சுற்றுபிரகார கல் மண்டபம் கட்டும் பணி;

**இணை ஆணையர் - உதவி ஆணையர்களுக்கு புதிய அலுவலகம்!**

தூத்துக்குடியில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மண்டல இணை ஆணையர் அலுவலகம் கட்டும் பணி; திருநெல்வேலியில் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மண்டல இணை ஆணையர் அலுவலகம் கட்டும் பணி; கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் 1.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உதவி ஆணையர் அலுவலகம்கட்டும்பணி; கிருஷ்ணகிரியில் 1.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் உதவி ஆணையர் அலுவலகம் கட்டும் பணி;

**என மொத்தம் 190.40 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 29 புதிய திட்டப் பணிகளுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.**

**15 திருக்கோயில்களில் 25 முடிவுற்ற திட்டப் பணிகள் மற்றும் 2 அலுவலகக் கட்டடங்களை திறந்து வைத்தல்:**

கோவை மாவட்டம், மருதமலை, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 4.39 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள சீரமைக்கப்பட்ட திருக்கோயில் மலை பாதை, மலைமேல் யாகசாலை மற்றும் திருக்கோயில் அடிவார நுழைவாயில்; மேட்டுப்பாளையம், அருள்மிகு வனபத்ரகாளியம்மன் திருக்கோயிலில் 1.79 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள படித்துறை, 1000 லிட்டர் திறன் கொண்ட மூன்று நீர் சுத்திகரிப்பு நிலையங்கள், குழந்தைகளுக்கு பாலூட்டும் அறை மற்றும் சேவார்த்திகள் தங்கும் விடுதி;

நாகப்பட்டினம் மாவட்டம், சிக்கல், அருள்மிகு நவநீதேஸ்வரசுவாமி திருக்கோயிலில் 1.07 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய வணிக வளாகம்; திருச்சிராப்பள்ளி மாவட்டம், சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் 4.63 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள அமாவாசை மண்டபம் மற்றும் குங்குமம் தயாரிக்கும் கூடம்; மயிலாடுதுறை மாவட்டம், திருப்புங்கூர், அருள்மிகு சிவலோகநாதர் திருக்கோயிலில் 3.20 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய திருமண மண்டபம்;

**வணிக வளாகம் பக்தர்களுக்கு தங்கும் விடுதி!**

திருவண்ணாமலை மாவட்டம், அ.கோ.படைவீடு, அருள்மிகு ரேணுகாம்பாள் திருக்கோயிலில் 3.65 கோடி ரூபாய் செலவில் புதிய திருமண மண்டபம் மற்றும் செயல் அலுவலர் அலுவலகம்; காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர், அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் 2.95 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய திருமண மண்டபம்; கடலூர் மாவட்டம், திருவந்திபுரம், அருள்மிகு தேவநாதசுவாமி திருக்கோயிலில் 2.80 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய திருமண மண்டபம்; சிவகங்கை மாவட்டம், திருப்புவனம், அருள்மிகு அடைக்கலம் காத்த அய்யனார் மற்றும் பத்ரகாளியம்மன் திருக்கோயிலில் 2.73 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள வணிக வளாகம், பக்தர்கள் தங்கும் விடுதி மற்றும் வாகன நிறுத்துமிடம்;

கரூர் மாவட்டம், தாந்தோன்றி மலை, அருள்மிகு கல்யாண வெங்கடரமண சுவாமி திருக்கோயிலில் 2.09 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள முடி காணிக்கை மண்டபம்; விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர், அருள்மிகு அங்காளம்மன் திருக்கோயிலில் 1.95 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள வணிக வளாகம்; திருவள்ளூர் மாவட்டம், திருவேற்காடு, அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோயிலில் 1.54 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள வணிக வளாகம் மற்றும் வாகன நிறுத்துமிடம்; திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டு வட்டம், தானிப்பாடி, அருள்மிகு பிள்ளையார் மற்றும் மாரியம்மன் திருக்கோயிலில் 76 லட்சம் ரூபாய் செலவில் புதிய வணிக வளாகம்; கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர், அருள்மிகு காளிகாம்பாள் காமாட்டீஸ்வரர் திருக்கோயிலில் 76 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள மலர் வணிக வளாகம்; ஈரோடு மாவட்டம், சென்னிமலை, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் 61 லட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய வணிக வளாகம்;

**நாகை - சேலத்தில் இணை ஆணையர் அலுவலகம்!**

நாகப்பட்டினத்தில் 4.18 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த மண்டல இணை ஆணையர் அலுவலகம்; சேலத்தில் 3.65 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள ஒருங்கிணைந்த மண்டல இணை ஆணையர் அலுவலகம்;

**என மொத்தம் 42.75 கோடி ரூபாய் செலவிலான 27 முடிவுற்ற திட்டப் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**

# ஊட்டச்சத்து: முதல்வர் வேண்டுகோள்!... முதல் பக்கத் தொடர்ச்சி

குழந்தைகளின் ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்த முடியும். எனவேதான், தற்போது 76,705 ஊட்டச்சத்து குறைபாடு உள்ளதாக கண்டறியப்பட்டுள்ள 06 மாத குழந்தைகளின் பாலூட்டும் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை அவர்களின் வீட்டிற்கே சென்று வழங்குவதோடு மட்டுமல்லாமல், குழந்தைகளின் நிலையை தொடர்ந்து கண்காணிக்கும் "ஊட்டச்சத்தை உறுதி செய்" திட்டத்தின் இரண்டாம் கட்டம் 22 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு முழுவதும் செயல்படுத்தப்பட உள்ளது. இதனை அரியலூர் மாவட்டத்தில் உள்ள வாரணவாசி குழந்தைகள் மையத்தில் 15.11.2024 அன்று நான் தொடங்கி வைக்கவுள்ளேன்.

**மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் விழிப்புணர்வை ஏற்படுத்துங்கள்!**

இத்திட்டத்தினை நான் தொடங்கும் அதேநாளில், ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியர் உடன் இணைந்து இத்திட்டத்தை துவக்கி வைத்து, ஊட்டச்சத்து குறைபாடு உள்ள குழந்தைகளின் தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் வழங்கிடுமாறு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் ஆகியோரை நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஊட்டச்சத்து குறைபாடு கண்டறியப்பட்ட குழந்தைகளின் தாய்மார்களை தமிழ்நாடு அரசுடன் இணைந்து, குடும்பத்தினரும் அதிக கவனத்துடன் பராமரிக்க, மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் முன்நின்று உரிய விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

இதன்மூலம் ஊட்டச்சத்து குறைபாடு இல்லா வலிமையான வளமான மாநிலமாக தமிழ்நாட்டை நிலை நிறுத்த உறுதி ஏற்போம்!

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி சுற்றுலாப் பயணிகளை கவர நெல்லை மாவட்டத்தில்

# சுற்றுச் சூழல் சுற்றுலா தலம் அமைக்க முதற்கட்டமாக ரூ. 5 கோடி ஒதுக்கீடு!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் ஆய்வு! அப்துல் வகாப் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

*நெல்லை, நவ. 14 -*

நெல்லை மாவட்டம், நெல்லை மாநகராட்சிக்குட்பட்ட கொக்கிரகுளம் ஹோட்டல் தமிழ்நாடு, டவுண் நயினார் குளம், சேரன்மகாதேவி வட்டம் பிராஞ்சேரி குளம் மற்றும் மணிமுத்தாறு அணைப் பகுதிகளில் நேற்று (13.11.2024) சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் கா.ப.கார்த்தி கேயன், பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மு.அப்துல் வஹாப் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

நெல்லை மாநகராட்சிக்குட்பட்ட கொக்கிரகுளம் பகுதியில் அமைந்துள்ள ஹோட்டல் தமிழ்நாடியிலுள்ள தங்கும் அறை, சமையல் கூடம், வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரம் குறித்து சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் ஆய்வு செய்ததோடு, காலை உட்கொண்டிருந்த வாடிக்கையாளர்களிடம் உணவின் சுவை, தரம் குறித்து விரிவாக கேட்டறிந்தார்கள்.

தொடர்ந்து, நெல்லை மாநகராட்சி டவுண் பகுதியில் அருள்மிகு சுவாமி நெல்லையப்பர் காந்திமதி அம்மன் திருக்கோவிலுக்கு அருகில் உள்ளது நயினார் குளம். இக்குளத்தின் ஆழம் 2.78 மீட்டர்(அ) 9.30 அடி, மொத்த பரப்பளவு 129.48 ஏக்கர் ஆகும். தற்போது நெல்லை மாநகராட்சியின் சீர்மிகு நகர திட்டத்தின் மூலம் கரைப்பகுதிகள் முழுவதும் தடுப்புச்சுவர், சுற்றுச் சுவர் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், குழந்தைகள் விளையாடுவதற்கான பூங்கா, குளத்தினை சுற்றி நடைப்பாதை, கண்காணிப்பு கேமரா, உணவு அருந்துவதற்கான இடம், கழிப்பறை வசதி போன்ற பொழுதுபோக்கு அம்சங்களுடன் பணிகள் முடியும் தருவாயில் உள்ளது. மேலும், இக்குளத்தில் படகு விடுதல், படகு சவாரி, நீர் விளையாட்டு போட்டிகள் போன்ற விளையாட்டு போட்டிகளுடன் பொதுமக்களுக்கு பொழுதுபோக்கு வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பது தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், திருநெல்வேலியில் இருந்து அம்பாசமுத்திரம் செல்லும் பிரதான சாலையில் பத்தமடை அருகில் உள்ள பிராஞ்சேரி குளம் பொதுப்பணித்துறை (நீர்வள ஆதாரம்) கட்டுப்பாட்டில் உள்ளது. இக்குளத்தில் தனியார் பங்களிப்புடன் படகு சவாரி ஏற்படுத்துவது தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, மணிமுத்தாறு அணை பகுதியில் 2023-2024 ஆம் ஆண்டு சுற்றுலாத்துறை அறிவிப்பின்படி மணிமுத்தாறு அணை பூங்கா பகுதியில் சாகச சுற்றுலா வசதிகள் பல்லுயிர் பூங்கா போன்ற பல்வேறு வசதிகளுடன் அடிப்படை கட்டமைப்புகள் ஏற்படுத்தி, நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி பொதுமக்கள் மற்றும் சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் சுற்றுச்சூழல் சுற்றுலா தலமாக மாற்ற முதற்கட்டமாக ரூ.5 கோடி செலவில் அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பது தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், மணிமுத்தாறு அணையில் படகு சவாரி தொடங்குவது குறித்தும், மணிமுத்தாறு அணைப்பகுதியிலுள்ள பூங்காவில் தேவையான கூடுதல் வசதிகள் ஏற்படுத்தி கொடுப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்ள சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் கள ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்நிகழ்வின் போது, மாநகராட்சி ஆணையாளர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, சேரன்மகாதேவி சார் ஆட்சியர் அர்பித் ஜெயின், களக்காடு, முண்டந்துறை புலிகள் காப்பகம் துணை இயக்குநர் (அம்பாசமுத்திரம் வனக்கோட்டம்) இளையராஜா, துணை மேயர் கே.ஆர்.ராஜீ, முன்னாள் சட்டமன்ற பேரவைத் தலைவர் இரா.ஆவுடையப்பன், முன்னாள் அமைச்சர் டி.பி.எம். மைதீன்கான், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மாலைராஜா, அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றிய தலைவர் பரணிசேகர், கல்லிடைக்குறிச்சி பேரூராட்சி துணைத் தலைவர் இசக்கி பாண்டி, சுற்றுலா வளர்ச்சிக் கழக உதவி மேலாண்மை மேலாளர் டேவிட் பிரபாகரன், சுற்றுலாத்துறை உதவி செயற்பொறியாளர் சீனிவாசன், மாவட்ட சுற்றுலா அலுவலர் சீனிவாசன் அவர்கள், கோபாலசமுத்திரம் பேரூராட்சி தலைவர் தமயந்தி, தலைமைச்செயற்குழு உறுப்பினர் பேச்சி பாண்டியன், பொதுக்குழு உறுப்பினர் பரமசிவ அய்யப்பன்,

மாநில தொண்டரணி துணைச் செயலாளர் ஆவின் ஆறுமுகம், விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன் உள்பட கழகத்தினர் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர். அலுவலர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தலைமைச் செயற்குழு உறுப்பினர் கிருபாகரன் புதல்வர் தீபக்தேஜஸ்ரீ திருமண வரவேற்பு விழா கிருஷ்ணகிரி – திருவண்ணாமலை ரோட்டில் உள்ள எஸ்.வி. மஹாலில் நடைபெற்றது. இந்த வரவேற்பு நிகழ்ச்சியில் உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, கைத்தறி மற்றும் துணி நூல்துறை அமைச்சர் ஆர்.காந்தி, கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளரும் பர்கூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினருமான தே.மதியழகன் ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள். இந்நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் – ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன் உள்ளிட்ட, மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். முன்னதாக உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர். கோ.வி.செழியன் திருமண விழாவில் கலந்து கொண்டார்.